தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515580

ஆணை நாள் 03.06.2026

முன்னிலை

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 939/B/2024**

திரு.S.பிரான்சிஸ் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கண்டாச்சிபுரம் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

பொதுத் தகவல் அலுவலர்,
தமிழ்நாடு ஆவணகாப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி,
எழும்பூர், சென்னை - 8.

**ஆணை**

இவ்வாணையத்தால் இன்று (03.06.2026) முற்பகல் நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு.S.பிரான்சிஸ் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திரு.அ.செந்தில்நாதன், கண்காணிப்பாளர்(நிலை பி), தமிழ்நாடு ஆவணகாப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி, எழும்பூர், சென்னை அவர்களும், திரு.எஸ்.பாலசந்தர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், , வட்டாட்சியர் அலுவலகம், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம் அவர்களும் ஆஜரானார்கள்.

2. மனுதாரர் 12.02.2024 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 18(1)ன் கீழ் தாக்கல் செய்த புகார் மனுவின் அடிப்படையில், இவ்வழக்கு இன்று (03.06.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மனுதாரர் 02.12.2023 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ், கண்டாச்சிபுரம் வட்டம், கோட்டமருதூர் கிராமம் சர்வே எண்.112/5, 112/6, 127/9, 128/10பி மற்றும் 128/10எ ஆகிய சர்வே எண்கள் தொடர்பாக 11 இனங்களில் தகவல்கள் வழங்கக்கோரி தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில் ஆனதாகும்.

3. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் தான் கோரிய தகவல்கள் நாளதுவரை வழங்கப்படவில்லை என்றும், முழுமையான தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடவேண்டுமென்றும் தெரிவித்தார்.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர்/கண்காணிப்பாளர், தமிழ்நாடு ஆவணகாப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி, சென்னை அவர்கள் மனுதாரர் கோரிய 11 இனங்களில், 6ம் இனத்திற்கான தகவல் மட்டுமே தங்கள் பொது அதிகார அமைப்புச் சார்ந்த தகவல் என்றும், அத்தகவல் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு சமப்பித்தார். பொதுத் தகவல் அலுவலர்/தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம் அவர்கள் ஆஜராகி மனுதாரர் கோரிய தகவல்கள் 29.05.2026 மற்றும் 09.01.2026 ஆகிய தேதியிடப்பட்ட கடிதம் வாயிலாக வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

5. மனுதாரர் தனக்கு தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை என்று தெரிவித்ததை தொடர்ந்து, பொதுத் தகவல் அலுவலர், மேற்படி தகவல்களை மனுதாரருக்கு விசாரணயின்போது நேரில் சார்வு செய்தார். அதனைப் பெற்றுக்கொண்ட மனுதாரர் முழுமையான தகவல்கள் கிடைக்கப்பெற்றதாகவும், ஆனால் மேற்படி புல எண்களில் உள்ள நிலங்கள் அனைத்திற்கும் தன்னுடைய பெயரில் உட்பிரிவு செய்து பட்டா வழங்கப்படவேண்டுமென்றும், இதன் அடிப்படையிலேயே தான் தகவல்களை கோரியுள்ளதாகவும் தெரிவித்தன்பேரில், பொதுத் தகவல் அலுவலரிடம், மனுதாரர் குறிப்பிட்டுள்ள புல எண்கள் தொடர்பான நிலங்களை புலத்தணிக்கை செய்து, அதுகுறித்த அறிக்கையினை இவ்வாணையத்தில் 09.06.2026 அன்று நேரில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

6. மேற்படி இவ்வாணையத்தின் உத்தரவிற்கிணங்க, பொதுத் தகவல் அலுவலர்/தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கண்டாச்சிபுரம் வட்டம் அவர்கள் இவ்வாணையத்தில் 09.06.2026 அன்று நேரில் ஆஜராகி, விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் வட்டம். கோட்டமருதூர் கிராமம், திரு.பிரான்சிஸ் த.பெ சவரிராஜ் என்பவர் மேற்படி கிராம புல எண் 112/5, 112:6, 127/9, 128/10A 128.10B, ஆகிய புல எண்கள் தொடர்பாக 08.06.2026 அன்று புலத் தணிக்கை செய்யப்பட்டது என்றும், மேற்படி கிராமத்தில் மனுவின் மீதான நேரடி விசாரணையில் 112/5 புல எண்ணானது 112/5A1 5A2, 5A3, 5A4, 5A5, 5A6A,5A6B, 5B2, 5B3, 5B4, 5B5, 5C. 6A1, 6A2, 6B, 6C1, 6C2, 6C3, 6D1, 6D2, 6F, 6H, 61, 61, 6K எண்ணாக உட்பிரிவு செய்யப்பட்டு தற்போது கிராம கணக்கில் தாக்கலாகியுள்ளது. மனுதாரர் கோரிய புல எண் 112/5B1 ,5B2, 5B3, 5B4, 5B5, 5A2 5 112/6E, 6G, 6I ஆகியவற்றிற்கு தகவல் கோரியதில் 112/5B1, 6E, 6G. 6I-க்கு நத்தம் புலப்படம் கோரியுள்ளார் மற்றும் UDR க்கு முந்தைய புலப்படம் கோரியுள்ளார். இவைகளுக்கு அனைத்து புல எண்களுக்கு புலப்படம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் புன்சை புல ண் 23/6C, 7A, 27/9A, 128/10B2, 127/10A2, 133/2, 91/2 இவைகளுக்கு Old புலப்படம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 112/6 ல் உள்ள உட்பிரிவு புல எண்கள் அனைத்தும் ணுதாரர் திரு. பிரான்சிஸ் த.பெ.சவரிராஜ் என்பவர் சொந்தம் என கோரியுள்ளார். ஆனால் UDR-க்கு பிறகு உட்பிரிவில் 112/6 ல் பிரிவு ஏற்பட்டு ஏழு நபர்களின் பேரில் பட்டா மாறியுள்ளது. மனுதாரர் கோரிக்கையின் அடிப்படையில் புல எண்களுக்கு அரசுக்கு கட்டணம் செலுத்தி அளவீடு செய்து உரிய தீர்வு காணலாம் என மனுதாரருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து, உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார்.

7. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில், கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகின்றது:-

- ***மனுதாரர் கோரியுள்ள தகவல்கள் 03.06.2026 அன்று இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணையின்போது, மனுதாரருக்கு, பொதுத் தகவல் அலுவலரால் நேரில் சார்வு செய்யப்பட்டு, மனுதாரரும் அன்றைய விசாரணையில் முழுமையான தகவல்கள் கிடைக்கப்பெற்றதாக ஏற்பளிப்புச் செய்துள்ளதையும் இவ்வாணையம் பதிவு செய்கின்றது.***

- ***மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ள நிலையிலும், அவர் மனுவில் குறிப்பிட்டுள்ள புலங்கள் தொடர்பாக இவ்வாணையத்தின் உத்தரவின் அடிப்படையில் பொதுத் தகவல் அலுவலரால் புல தணிக்கை செய்யப்பட்டு, அதுகுறித்த தகவல்கள் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொதுத் தகவல் அலுவலர் 09.06.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பித்துள்ளதையும் இவ்வாணையம் பதிவு செய்து, மனுதாரருக்கு ஆவணங்களின் அடிப்படையில் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக கருதி, இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகின்றது.***

**ஒம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**
**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 939/B/2024</u>**
**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கண்டாச்சிபுரம் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்,
தமிழ்நாடு ஆவணகாப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி,
எழும்பூர், சென்னை - 8.

திரு.S.Francis,
Jay Jhanda Nagar,
6 Mahatma Welfare Society,
Orlem Ambawadi,
Malad West, Marve Road,
Mumbai - 400 064.

Copy to: File
Sj/Ps- 12/06/2026

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005